eISSN: 3049-0723 pISSN: 3107-7781
Vol. 4 Issue: 03 December 2025
DOI: https://doi.org/10.63300/tm040312

# Social Thought in Kalaignar's Letters

**D. Jebastin,**
Ph.D. Research Scholar. Department of Rare Paper Manuscripts,
Tamil University, Thanjavur - 613 010.
Email: jebastingd@gmail.com

**Abstract:**

In the socio-political history of Tamil Nadu, Kalaignar M. Karunanidhi's morning letters, famously titled 'Udanpirappe' (My Dear Sibling/Kin), created a unique literary and political impact. These letters did not merely function as a medium for conveying party news; rather, they evolved into a powerful tool for deeply instilling the core ideologies of the Dravidian movement, particularly social reform philosophies, in the minds of the grassroots cadres. Through these letters, he put forth over fifteen significant social objectives, such as living in unity for the betterment of society, working tirelessly, shunning violence, engaging in public service with Tamil consciousness, journeying on the path of rationalism, and creating a society free from dominance, all with the aim of fostering a collective sense of purpose. This research paper extensively explores the central threads of Kalaignar's social thought as described in the original document. Specifically, it analyzes how he crafted intricate philosophies such as political tolerance (தீமைக்குத் தீமை செய்யாதே – Do not repay evil with evil), practical social justice (ஆலயச் சீர்திருத்தம் – Temple reforms), and the spirit of sacrifice (விழுப்புண்படாத நாள் வீணான நாளே! – A day without a battle-scar is a wasted day!) to establish his political ideals. The central argument of this study is that his letters not only outlined codes of conduct for cadres but also endured as a collection of socio-political philosophical principles guiding society to uphold justice, establish equality, and foster a society free from domination.

**Keywords** : *Kalaignar Karunanidhi, Epistolary Literature, Udanpirappu, Social Justice, Rationalism, Annaism, Socialism, Political Civility, Equality, Dravidian Movement..*

**References:**

1. Social Thought in Artist Letters." Ref1.doc. N.d., pp. 4–195.. 1 (Note: Page numbers of the source document are cited within the article).

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

# கலைஞர் கடிதங்களில் சமுதாயச் சிந்தனை

**து. ஜெபஸ்டின்,**
முனைவர் பட்ட ஆய்வாளர், அரிய கையெழுத்துச் சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613 010.

**சுருக்கம் (Abstract)**

தமிழ்நாட்டின் சமூக அரசியல் வரலாற்றில், கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தன்னுடைய 'உடன்பிறப்பே' எனும் தலைப்பிலான காலைக் கடிதங்கள் மூலம் ஏற்படுத்திய தாக்கம் ஒரு தனித்துவமான இலக்கிய மற்றும் அரசியல் வடிவமாகும். இக்கடிதங்கள் வெறும் இயக்கச் செய்திகளைப் பரிமாறும் ஊடகமாகச் செயல்படாமல், திராவிட இயக்கத்தின் மையச் சித்தாந்தங்களை, குறிப்பாகச் சமூகச் சீர்திருத்தச் சிந்தனைகளை, அடித்தட்டுத் தொண்டர்களின் மனதில் ஆழமாகப் பதிய வைக்கும் கருவியாகப் பரிணமித்தன. இக்கடிதங்கள் மூலம் அவர் சமுதாயம் நல்வளர்ச்சி அடைய ஒற்றுமையுடன் வாழுதல், ஓய்வின்றிப் பணி செய்தல், வன்முறையை விலக்குதல், தமிழுணர்வுடன் பொதுப்பணியாற்றுதல், பகுத்தறிவுப் பாதையில் பயணித்தல், ஆதிக்கமற்ற சமுதாயத்தை உருவாக்குதல் போன்ற பதினைந்துக்கும் மேற்பட்ட முக்கியச் சமூக இலக்குகளைப் பொதுப்பற்றைத் தூண்டும் நோக்குடன் முன்வைத்தார்.

இவ்வாய்வுக் கட்டுரை, மூல ஆவணத்தில் விவரிக்கப்பட்டுள்ள கலைஞரின் சமூகச் சிந்தனைகளின் மைய இழைவுகளை விரிவாக ஆராய்கிறது. குறிப்பாக, அவர் தனது அரசியல் இலட்சியங்களை நிலைநிறுத்த, அரசியல் சகிப்புத்தன்மை (தீமைக்குத் தீமை செய்யாதே), நடைமுறைச் சமூக நீதி (ஆலயச் சீர்திருத்தம்), மற்றும் தியாக உணர்வு (விழுப்புண்படாத நாள் வீணான நாளே!) போன்ற நுணுக்கமான தத்துவங்களை எவ்வாறு வடிவமைத்தார் என்பதைப் பகுப்பாய்வு செய்கிறது. அவருடைய கடித வரிகள், தொண்டர்களுக்கான செயல் நெறிகளை வகுப்பதுடன், சமூகம் நீதி காத்து, சமத்துவத்தை நிலைநாட்டுவதற்கும், ஆதிக்கமற்ற சமுதாயம் உருவாவதற்கும் வழிகாட்டிய சமூக-அரசியல் தத்துவக் கோட்பாடுகளின் தொகுப்பாக நீடித்திருக்கின்றது என்பதே இவ்வாய்வின் முதன்மைக் கருத்தாகும்.

**முக்கியச் சொற்கள்:** *கலைஞர் கருணாநிதி, கடித இலக்கியம், உடன்பிறப்பு, சமூக நீதி, பகுத்தறிவு, அண்ணாயிசம், பொதுவுடைமை, அரசியல் நாகரிகம், சமத்துவம், திராவிட இயக்கம்.*

**முன்னுரை:**

கலைஞர் கருணாநிதி அவரகள் சமுதாயத்தின் முன்னேற்றத்தைத் தன்னுடைய இலட்சிய நோக்காகக் கொண்டவர். தன்னுடைய காலை கடிதத்தில் சமுதாயம் நல்வளர்ச்சி அடைய ஒற்றுமையுடன் வாழு, ஓய்வின்றி பணி செய், வன்முறைப் பக்கம் தலை வைக்காதே, தமிழுணர்வுடன் பொதுப்பணியாற்று, பிறர் வாழ்க்கை முன்னேற உதவியாய் இரு, தீமை செய்யாதே, நீதியின் பக்கம் நில், அறவழியில் போராடு நாட்டுக்காக உழைத்து சமத்துவம நிலை நாட்டு பொதுவுடைமை பெற, பகுத்தறிவுப் பாதையில் பயணம் செய், ஆதிக்கமற்ற சமுதாயத்தை உருவாக்கு, சமுதாய வளர்ச்சியில் உன் அக்கறையைக் காட்டு என்று எழுச்சிமிக்க கடித வரிகள் மூலம் சமுதாயப் பற்றைத் தூண்டும் கருவியாக இருந்தார்.

**ஒற்றுமையை நிலைநாட்டு:**

கலைஞர் கழகத் தோழர் பிரிந்து சென்று சுயேச்சையாக போட்டியிடுவதை இக்கடிதத்தில் குறிப்பிடுகிறார் ஜான் கென்னடி – ஜாக்குலின் இவர்களின் இல்லறவாழ்வு அனைவராலும்

பெருமையாகப் பேசப் பட்டு வந்தது. ஆனால், கென்னடியின் மறைவுக்குப் பின் ஜாக்குலின் ஒனாசிஸ் என்பவரை மணந்து இருப்பது அனைவராலும் பெருமையாகப் பேசப்படவில்லை.

அதுபோலவே, கழகத்தில் இருந்து பிரிந்து சென்ற தோழர்களும் சுயேச்சையாக நிற்பது யாராலும் புகழப்படுவதில்லை. இது ஒனாசிஸ் ஜாக்குலின் வாழ்வாகும். ஜான் கென்னடி ஜாக்குலின் வாழ்வு எதைக் குறிப்பிடுகிறது என்றால் கழகத்துடன் இணைந்து இருந்த நிலையை விளக்குகிறார்.

'மாலையில் இருந்த மலர்கள் திடிரென

உதரிப்பூக்களாவதா?" (க.க.1.க. எண்.1 பக்.4.) ஆகவே, கழகத்தில் இருந்தவர்கள் கழகத்தை விடுத்து சுயேச்சையாகப் போட்டியிட வேண்டாம். அவ்வாறு போட்டியிடுவதைத் தவிர் த்து இணைந்து, இணைந்த பூக்கள் மாலையாவது போல, நாம் அனைவரும் இணைந்து மாலையாக, சேர் ந்து கழகப்பணி செய்வோம். ஒற்றுமையாக இருந்து நற்பணி செய்வோம் என்று கழகக் கண்மணிகளை அழைக்கிறார் மலர் மாலை தான் அழகு. நாம் ஒற்றுமையாக இருந்து செயல்பட 'மாலை" என்ற சொல் நமக்கு அறிவுறுத்துகிறது.

**ஓய்வின்றி பணி செய்:**

கழகத்தின் உயிர் நாடியான உடன்பிறப்பைப் பார்த்து, விளித்துக் கூறும் கருத்து. இந்த இயக்கத்தில் உனக்கும் எனக்கும் இடையே வளர்த்து, வைத்து இருக்கும் அன்பை யாராலும் பிரித்து விட முடியாது. கழகத் தோழனைப் பார்த்து தமிழே! உயிரே! ஒப்பற்ற தீரனே! உடன்பிறப்பே! தோழனே! என்று உரிமையுடன் பணி செய்ய அழைக்கிறார். உனக்குக் கழகத்தின் மீது பாசம் இருக்கிறது. உன்னைப்போல் நாட்டில் கழகத்தின் உயிர்நாடிகள் இருக்கும்போது உன்னையும் என்னையும் யாராலும் எந்தச்சக்தியாலும் நம் தேசத்தைக் குலைத்து விட யாராலும் முடியாது என்பதை நாடே அறியும். நம் இயக்கத்தை வளர்க்க, நம் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு தவிர, இந்த இயக்கத்தை நான் தான் வளர்த்தேன் அது அழிக்க எனக்கு உரிமையுண்டு என்று யார் கூறினாலும் அவர்களை நீ விட்டு வைத்தது கிடையாது. அப்படி நினைத்தவர்கள் அடுத்த நொடியே காணாமல் எங்கேயோ ஒரு ஆழமான பள்ளத்தில் வீழ்ந்து தத்தளித்துக் கொண்டு இருக்கிறார்கள். கழகத்தில் எத்தனையோ சோதனைகள் வந்தபோது அறிஞர் அண்ணா அவர்கள் கூறும் அறிவுரைப்போல் எனக்கும் தகுதி உண்டு என்று கருதிக் கொண்டு கழகத்தைப் பிரித்துப் புதிய கட்சி ஆரம்பித்து இன்று மூலைக்கு ஒருவராக போய்விட்டார்கள். இதனை அரசியல் வரலாறு கூறிக் கொண்டு தான் இருக்கிறது.

நம் கழகத்திற்கு ஏற்பட்ட சோதனை நேரத்தில் கழகத்தின் அத்தியாயம் முடிந்தது என்று கனவு கண்டு களிப்படைந்தவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஆனால், என் அன்பு நண்பனே என்ற வார்த்தை பக்தர்கள் ஆண்டவனைப் பார்த்து

'தேவே! கோவே! தெய்வமே! தாயே! தந்தையே!

உயிரே! என்றெல்லாம் பலவாறு அழைத்து மகிழ்வது போல்

நாலும் உன்னை ஒவ்வொரு நாளும் உயிரே! தமிழே!

ஒப்பற்ற தீரனே! உடன்பிறப்பே! உழுவலன்பு கொண்ட தோழனே!

என்றெல்லாம் கூறி இன்பநிறைவு கொள்கிறேன்!" **(க.க.2.க. எண்.38.பக்.32.)**

என்று அன்பு கலந்த வார்த்தையால் கழகத் தோழனைப் பணி செய்ய அழைக்கிறார். ஒவ்வொரு சிக்கலான கட்டத்திலும், நீ காட்டிய தீரமும் உண்மையான தியாகத்திற்கு நீ தந்த மதிப்பும், அண்ணன் வளர்த்த இலட்சியம் நிறைவேற உயிரை விடவும் தயார் என்று நீ எடுத்துக் கொண்ட சூளுரை வலிமையான கோட்டையாய் இருக்கிறது. இந்தக் கோட்டையை எதிரிகளும் பிடிக்க முடியாமல் துரோகிகளும் காட்டிக் கொடுக்க முடியாமல் காப்பாற்றிக் இருக்கிறது. கழகத்தின் உயிர் நாடியாக இருக்கும்போது எந்தச் சக்தியும் நம்மை நெருங்க முடியாது.

'வாள் முனைக்கு எதிர் நின்று
நீ வடித்த வெற்றிகள் எத்தனை
துப்பாக்கிச் சனியனுக்கு நெஞ்சு காட்டி
நீ ஏற்றுக்கொண்ட அடக்குமுறைகள் எண்ணத் தொலையுமோ?
இன்று உன் வேலை முடிந்து விட்டதாக எண்ணிடாதே!
உன் சகோதரர்கள் சில பேரை அமைச்சர்களாக்கி விடுவதோடு உன் பணி முடிந்துவிடவில்லை!
இது மட்டுமே நீ ஏற்றுக்கொண்ட பணியுமல்ல!" **(க.க.2.க. எண்.38.பக்.33.)**

கழக உடன்பிறப்பைப் பார்த்து கூறிய வார்த்தைகள் உன் வேலை முடிந்துவிட்டது என்று எண்ணிவிடாதே. ஒரு சிலரைப்பலப்பதவியில் அமர வைத்துவிட்டோம் என்று சோர்ந்து போய் இருந்திடாதே தொடர்ந்து கழகத்திற்கு உன் பணி தேவை என்று வெளிப்படுத்தி எழுதியுள்ளார்.

**வன்முறைப்பக்கம் தலை வைக்காதே:**

நமது அண்ணன் வன்முறை கூடாது என்று வலியுறுத்திச் சொல்லி நம்மை வளர்த்தவர். அண்ணா நோயுற்று இருந்தபோது அவர் சிலையைச் சுற்றி முக்காடிட்டு ஊர்வலம் வந்து, அவர் சிலையிருந்த பீடம் மறைகிற அளவுக்கு கறுப்புத் துணிகளைப் பரப்பித் துக்கம் கொண்டாடிய காங்கிரசார் அந்த வன்முறைச் செயலை, அரசியல் அநாகரிகச் செயலைக் கண்டித்து ஒரு வரி எழுத பெரிய இடத்து ஏடுகள் அப்போது முன்வரவில்லை. பெரிய இடத்து ஏடுகளும் ஆட்களைப் பார்த்து தான், செய்தியை வெளியிடுகிறது. அண்ணன் உயிருடன் இருந்த போது துக்கம் கொண்டாடியவர்கள் மீது கோபம் கொள்ளாமல், பொறுமையுடன் புன்னகை தான் புரிந்தார். நம்மையும் அமைதியுடன் இருக்க சொன்னார். நாம் அரசு கட்டிலில் ஏறிய முதலாம் ஆண்டு நடைபெற்ற ஆகஸ்டு 15 விடுதலை நாள் விழாவின் போது அண்ணாவும் நானும் அமைச்சர் மாளிகையில் தேநீர் விருந்து விழாவில் கலந்த போது முரசொலி அலுவலகம் தாக்கப்பட்டது. இதையும் எந்தப் பத்திரிகை ஏடுகளும் ஒரு வரி கூட எழுதவில்லை அந்தச்சூழ்நிலையிலும் யாரும் வன்முறை வெறியாட்டங்களுக்கு ஒரு துளியும் இடம் கொடுக்காமல் அமைதி உடன் இருக்க அன்பு வேண்டுகோள் விடுத்தார் 1965 இல் இந்தி எதிர்ப்புப் புரட்சியிலும் வன்முறையைக் கண்டித்து தினமும் அறிக்கை விட்டுக் கொண்டுதான் இருப்பார். இந்தி எதிர்ப்புப் புரட்சியில் சமூக விரோதிகள் வன்முறையாளர்களாக புகுந்து விட்டார்கள் இனி போராட்டம் வேண்டாம் நிறுத்துங்கள் என்றார். விவசாயிகள் பிரச்சனைக்காகப்போராடிய நிலையில் வன்முறையாளர்கள் நடத்தியுள்ள நாசநடவடிக்கைகளைக்கண்டித்து இந்தியா முழுவதும் ஏடுகள் பலவும், இங்குள்ள ஏடுகளும் கண்டித்து எழுதியிருப்பதை நீ படித்திருப்பாய்.

'வன்முறையைக் கண்டிப்பது பொதுவான விவகாரமாகும்!
எந்தக் கட்சியினர; நடத்தினாலும் அதனைக்
கண்டிக்கிற தூய உள்ளம் ஏற்பட்டாக வேண்டும்
அந்தப் பொது நோக்கோடுதான்
வன்முறையின் பக்கம் எவருமே
தலை வைத்துப் படுத்தலாகாது" (க.க.2.க.எண்42.பக்.53,54)

வன்முறையை யாரும் கையில் எடுக்கக் கூடாது. வன்முறையை அறவழியில் தான் வெற்றி கண்டிட முயற்சி செய்யுங்கள். தவறு யார் செய்தாலும் சிந்தித்துச் சிறந்த முடிவைத் தான் சொல்ல வேண்டும். தவறு செய்தவரைக் கண்டிப்பது தான் சரியாகும். கழகத் தோழரைப் பார்த்து நீங்கள் நல்ல உள்ளம் கொண்டு பொது நோக்கத்துடன் பணியாற்றுங்கள். அவ்வாறு பணி செய்யும் போது கையில் வன்முறையை எடுக்காதீர்கள் என்று அறவழியில் புரட்சியைச் செய்யுங்கள் என்று அறிவுரையைக் கூறுகிறார்.

**தமிழ் எனும் பயிரை வளர செய்:**

திராவிடர் கழகத்தின் தாக்குதல்கள் தொடர்ந்து இருந்த போதிலும், அண்ணா அவர்களும், அவர் உருவாக்கிய முன்னேற்றக் கழகமும் மிகவும் எச்சரிக்கையாக இருந்தது. தங்களுக்கு ஏற்படும் தாக்குதலுக்கு எதிர்த்தாக்குதல் செய்யாமல், தேவையான நேரங்களில் மட்டும் தெளிவான விளக்கம் தந்தது. அண்ணா அவர்கள் ‘தமிழ்ச் சமுதாயத்தின் இருகண்கள்’. என இரு கழகங்களையும் கண்ணும் கருத்துமாய் எவ்விதமான குழப்பம் ஏற்படாமல் பாதுகாத்து வந்தார் உடன்பிறப்பே, அதில் எனக்குக் கிடைத்த நல்வாய்ப்பு பெரியாரும் நானும் திருச்சியில் இந்தி எழுத்துக்களை அழித்தோம். திருச்சி புகைவண்டி நிலையத்தில் பெரியார் ஒரு பலகையிலும், நான் ஒரு பலகையிலும் உள்ள இந்தி எழுத்துக்களை அழித்தோம். தேசியக்கொடியைப் பெரியார் கொளுத்தப் போவதாக அறிவித்ததை யொட்டி, தேசிய சின்னங்களைப் பாதுகாக்க ஒரு கடுமையான சட்டம் சட்டப்பேரவையில், காங்கிரசு அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டது. அப்போது அண்ணா பெரியாரை விட்டுக் கொடுக்க வில்லை. பெரியாரிடம் காமராஜர் மிகவும் நெருக்கமானவர் அதனைப் பேசியே தீர்த்துக்கொள்ளலாம் என்று பேரவையில் கருத்து மழை பொழிந்தாரர். இந்தச் சட்டத்தின் வாயிலாக பெரியாரை அடக்கி விட வேண்டும் என்று முனைந்தவர்க்கு அண்ணா துணை போகவில்லை. தி.மு. கழகத்தின் போராட்டம் சுடுசொல் கூறி விமர்சித்ததைக் கண்டிப்பதற்கு என்று நடைபெற்றது. இதனால் திராவிட முன்னேற்ற கழகத்தின் அரசியல் பண்பாட்டையும், தமிழ்ப்பற்றையும் வானளவாகப் புகழ்ந்து உரைத்தனர் நாற்பது ஆண்டு கால பொதுவாழ்வில் அறிஞர் அண்ணா, பெரியாரிடம் கற்றுக்கொண்ட ஆழமான கொள்கைப் பிடிப்பும், அண்ணா நமக்கு வழங்கிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் உணர்வும் எதையும் தாங்கும் இதயத்துடன், அவர் நிகழ்த்திய எதிர்நீச்சல் அரசியலில் பொறுமையின் நிலைக்களமாக இருந்தது. அவர் கடைபிடித்த அரசியல் நாகரிகமும், எருவாக நீராக அமைந்துள்ளது. அவைதான் ஆயிரங்காலத்துப் பயிராகத் திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்த்திருக்கிறது. இந்தப் பயிர் துரோகம் எனும் களைகளால் கெடுதி வராமல், சந்தர்ப்பவாதிகள் என்றும் பூச்சியால் தீமை வராமல், எதிரியாய் வரும் ஆடுமாடுகளால் சேதம் வராமல் பாதுகாக்கும் பொறுப்பை உழவனாக நீ இருந்து காத்திடு. உடன்பிறப்பே! நாம் ஒவ்வொருவரும் இந்தப் பொறுப்பை ஏற்று நடந்திட வேண்டும். ஆண்டாண்டுக் காலமாக காக்கும் பொறுப்பை ஏற்றால் தான் அறிவுச்சுடர் பெரியாருக்கும் அரசியல் ஞானி அண்ணாவுக்கும் ஆயிரங்காலத்துப் பயிராம் கழகத்துக்கும் விழா எடுக்க விரைந்து வா என்கிறார்.

‘துள்ளி வரும் வேலே!
ஆவேசத்தை அள்ளி வரும் வாளே!
நீ இருக்க உன் நெஞ்சில்
தமிழ் உணர்விருக்க
அந்த உணர்வில்
பெரியார் அண்ணா உருவிருக்க
நம் இயக்கப் பயிருக்கு ஒரு குறையுமில்லை!
இலட்சியம் பயணம் தடைப்படுவது மில்லை! (க.க.3, க.எண்97, பக்.107)

ஆகவே, தமிழ் உணர்வில் இருக்கும் போது ஆயிரங்காலத்துப் பயிருக்கு ஒரு குறையும் இராது என்ற துணிவுடன் கழகத்தை உயர்த்திடுவோம் என்கிறார் கலைஞர். தமிழ் எனும் பயிரை வளர்ப்போம் என்ற உணர்வை வளர்த்தவர் கலைஞர்.

**பொதுப்பணியாற்ற புறப்படு:**

பச்சை பட்டாடை புனைந்து நில மகள் நடம் புரிந்த கழனிகள் பல காய்ந்து கிடப்பதைக் காண்கிறோம். இந்த நூற்றாண்டில் இந்த ஆண்டு போல் மழை பொய்த்த ஆண்டே கிடையாது என

வானிலை விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இயற்கையை எதிர்த்துப் பெரிய போராட்டம் நடத்தப் புறப்பட்டு இருக்கிறோம். இடையிலே சில விநாடிகள் இளைப்பாற ஆறுதல் கொள்ள, ஊக்கம் பெற, உற்சாகத்தை வரவழைத்துக் கொள்ள இந்த அளவுக்கே இந்த ஆண்டு பொங்கல் விழா இருந்திட முடியும். கடுமையான வறட்சியை எதிர்த்து வலிமை மிகுந்த கரங்களை உயர்த்திக் காட்டுவோம். எங்கும் வறட்சி நிவாரணப்பணிகள், கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகள். அவை வெறும் உதவிப் பணிகளாக இல்லாமல் எதிர் காலத்திற்குப் பயன்படும் பணிகளாக நிறைவேற்றப் பாடுபட்டோம். பயன் அடைந்த மக்கள் பரவசம் அடைந்தனர்.அவர்களைத் தாக்கிய வறட்சியில் இருந்து அவர்களைக் காத்திட இராணுவ நடவடிக்கை போல வறட்சி நிவாரண நடவடிக்கையை மேற்கொண்டோம்.

நமது கவனம் மக்களிடமே முழுமையாக இருந்தது. சுடுசொற்கள், எரிச்சல், கறைகள், அவதூறு, அஸ்தரங்கள் நம் பணியின் முன்னால் முனை மழுங்கி போய்விட்டது. வறட்சியைத் துரத்தி அடித்து புறங்கண்டோம். வெற்றி பெற்றோம் இயற்கையின் கோபத்தை எதிர்த்துப் போராடி வெற்றி வாகை சூடினோம். எந்த சூழ்நிலையிலும் ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்கு நமது அண்ணணிடம் பயிற்சி பெற்று இருக்கிறோமே அதனால் தான் எதிர்த்தரப்பில் இருந்தபோதும், ஆளுங்கட்சியாக அமர்ந்தபோதும், ஆக்கப்பூர்வமான காரியங்களைத் துன்பப்படும் மக்களுக்கு நம்மால் உதவிகளைச் செய்யமுடிந்தது. வறட்சி தலை நீட்டுகிறது என்ற உடனே ஐம்பது கோடி ரூபாயில் வறட்சிப்பகையை முறியடிக்க நிவாரணப் போர்க்கருவிகள் தயாராக இருந்தது. இந்த ஏற்பாடுகளைப் கண்டதும் எதிரிகள் எல்லாம், இது ஒழுங்காக செலவாக வேண்டுமே என்று பழைய கதையைச் சொல்லி அழுகின்றனர். அவர்களுக்கு நினைவு, தாங்கள் புத்தர், ஏசுகிறிஸ்து, முகமதுநபிகள் என்று பாவம் அவர்கள் நிலைக்கண்ணாடியில் தங்கள் முகத்தைப் பார்த்துக் கொள்ளட்டும் நெஞ்சைத் தொட்டுப் பார;த்துக் கொள்ளட்டும் தங்களின் இதயத்துடிப்புகளின் தீர;ப்பைக் கேட்டுக் கொள்ளட்டும் என்று கூறுகிறார;. நீ இப்போது அவர்களைப் பற்றிக்கவலைப்படாதே நீ பொங்கி எழுந்து பொதுப்பணியாற்றத் தான் இந்தப் பொங்கல்.

இன்றுமுதல் உன் கால்கள் வறண்டு கிடக்கும் வயல்களின் பக்கம் நடக்க வேண்டும். அங்கு வாடிக் காணப்படுகிற விவசாயிகளின் துயரைத்துடைக்க துடிக்க வேண்டும். குடிக்க நீரின்றி காணப்படும் கிராமங்களில் நீ இருந்து பணி செய். கைமாறு கருதாமல் என் கண்மணியே உன் கடுமையான உழைப்பால் குடிநீர; பெற்றுத் தந்து தாகம் தீர்த்திட உதவி, நீ வெற்றி பெற வேண்டும். மக்களுக்கு வழங்கும் அரசு நலத்திட்டம் அனைத்துமே சிந்தாமல் சிதறாமல் மக்களுக்குப் போய் சேருகிறதா என்று கவனிப்பதிலும், நினைப்பதிலும் உன் நேரத்தைச் செலவு செய் என்கிறார்.

‘வீண் புரளிகளைப் பற்றிச் சிந்திக்கத் தேவையில்லை!
விழலுக்கு நீர் இறைக்கப்பட்டால் அதனை உரியவரிடம்
எடுத்துக்கூறித் தடுக்கும். முரசாக நீ மாறிட வேண்டும்!
கண்ணீர் துடைக்க உன் கைகள் தாவட்டும்!
கஷ்டம் தீர்க்க உன் கால்கள் பாயட்டும்!
உன் கருணை உள்ளம், எங்கும் வெள்ளமெனப் பெருகட்டும்!
துயர் துடைக்கும் பணிகளுக்குத் துள்ளிக் குதித்து ஓடு.!(க.க.4,க.எண்113,பக்.9)

தமிழ் உணர்வு கெடாமல் பசுமையைக் காத்துப் பொங்கல் கொண்டாடி, வறட்சி உருவில் வரும் முரட்டுக் காளையின் கொம்பை ஒடித்து வெற்றி கண்டு, இயற்கைக் கொடுமைக்கு எதிராக போராடி மக்கள் பணியைச் சிறப்புடன் செய் என்று கூறியும், பிறர் பயன் அடையும் பொதுப்பணியை நாளும் செய்திடு என்று எழுதுகிறார் கலைஞர்.

**எப்போதும் தமிழுணர்வுடன் இரு:**

உரையும் கலை நிகழ்ச்சியும் கூட இளங்கோவின் காப்பியச் சுவை பற்றியதாகவே அமைந்து இருந்தது. கடல் கொண்ட காவிரிப் பூம்பட்டினத்தின் சிறப்பை விளக்கிட அங்கு கலைக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புலவர் பெருமான் இளங்கோவின் புகழ் பாடப்பட்டது. கரிகாலன் ஆட்சியும் கண்ணகியின் மாட்சியும் பாண்டியனின் பண்பாடும், சேரனின் வீரமும் விளக்கப்பட்டன. கடலோரங்களில் வாழும் மீனவக் குடும்பங்களுக்குக் கல்வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இதனை அவர்களால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. தமிழர்களின் மாண்பினைக் கூறும் விழா எடுத்து, தமிழ் வளர்ச்சியைத் தட்டி எழுப்புகிறார்களே என்று அவர்தம் இருதயம் குமுறுகிறது. அடித்தட்டில் உழலும் மீனவர்களுக்கு எதற்காக வலுவான வீடுகள் என்று அடிவயிற்றில் அடித்துக் கொள்கிறார்கள். வறட்சியால் வாடும் மக்களோடு சேர்ந்து, அவர்களது துன்பத்தில் பங்கு கொண்டு அவசரகாலப் பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கிற அரசு தமிழ்க்காப்பிய விழா கொண்டாடுவது குற்றம் என்று கூறுகிறார்கள். காமராசர் ஆட்சிக்காலத்தில், காங்கிரசார; ஆட்சிக் காலத்தில் மின்சார வெட்டே வந்ததில்லையா? இப்போதும் சில மாநிலங்களில் மின் வெட்டு இல்லையா? கரிகாலனுக்கு விழா, இளங்கோவுக்குச் சிறப்பு கட்டபொம்மனுக்குக் கோட்டை, வள்ளுவருக்குக் கோட்டம், காரைக்குடியில் தமிழ்த்தாய் விழா இவைகளை எல்லாம் அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாது. தமிழினத்தின் சிறப்பை மங்காமல் மறையாமல் காப்பாற்றுகிற எதனையும் அவர்களால் சகித்துக் கொள்ள முடியாது. அவர்களுக்கு அதனைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் பொறாமையால் ஏடுகளில் எழுத்துகளால் வெளியிட்டுள்ளார்கள்.

அந்த ஏட்டின் கடைசி பக்கத்தில்
வறுமையில் நீந்தி
வளமான கோப்பை ஏந்தி
பெறுவது ஆத்ம சாந்தி (க.க.4,க.எண்125,பக்.59)

ஜீவாத்துமாவின் ஆசையை அப்படி எடுத்துக் காட்டுகிறார். ஆனால், பத்திரிகை நண்பர்கள் கண்ணகிக் காப்பியத்தைச் சிறப்பிக்கும் வகையில் நாம் எடுத்த விழாவைத் தாக்குவதிலும் தமிழுணர்வு கொண்டு பணிபுரியும் அரசு விழ வேண்டும் என்பதே அவர்களின் ஆத்ம சாந்தியாம். பாவம் அந்தப் பத்திரிகையாளர் ஆத்மா என்று ஒன்று இருந்தால் அது சாந்தி அடைய போவது இல்லை. தங்கள் உடம்பில் உள்ள சிரங்கைச் சொறிந்து கொள்கிறார்கள் சொறியும் போது ஆறுதலாக இருக்கும். ஆனால் பிறகுதான், எரிச்சல் ஏற்படும். அதுவரையில் அவர்கள் அந்த அற்ப மகிழ்ச்சியை அடைந்து கொள்ளட்டுமே என்று கலைஞர் தனது கடிதத்தில் எழுதுகிறார் நாம் தமிழுணர்வு கொண்டு விழாவைக் கொண்டாடியது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அதற்காக நாம் தமிழுணர்வைக் கைவிடாமல் அதன் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும் என்கிறார் கலைஞர்.

**பிறர் வாழ்வில் ஒளி ஏற்று விளக்காயிரு:**

அண்ணாவின் குடும்பத்திற்கோர் நிதி திரட்டி வழங்கிட வேண்டுமென்று விடுத்த வேண்டுகோளைக் கேட்டு மாவட்டச் செயலாளர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியும், ஒன்றியச் செயலாளர்கள் மேற்கொண்ட ஆர்வத்தையும் நான் பாராட்ட கடமைப்பட்டு இருக்கிறேன். அண்ணா குடும்பநிதி என்ற தலைப்பிட்டுக் கழகக் கண்மணிகள் அனுப்புகின்றவற்றைச் சேகரித்து அதைத் தங்களின் கடமையாகக் கொண்டு நிறைவேற்றிட வேண்டுகிறேன். அண்ணாவின் குடும்பத்திற்கு எதற்கு நிதி என்று, அண்ணாவின் அருமை பெருமைகளை விளக்கி, அந்தக் குடும்பத்திற்கு நிதி வேண்டும் என்று விரிவாக எழுதித்தான் நீ அறிய வேண்டிய அவசியமில்லை. எல்லாம் அறிந்தவன் நீதான். எனினும் சுடர் விளக்கிற்கும் தூண்டுகோல் தேவை என்பது போல் அயராது பணியாற்றும் உனக்கு நினைவூட்டுவது என் கடமை. அவசியத்தை உணர்த்துவதற்கு அல்ல இந்தக் கடிதம் நினைவுபடுத்த மட்டுமே இந்தக்கடிதம்.

அமைச்சர்கள், நாடாளுமன்றம், மாநிலங்கள் அவை உறுப்பினர் சட்டப் பேரவை உறுப்பினர்கள், மாவட்டக் கழகங்கள் இணைந்து இதற்கான முயற்சி செய்து, நாளை பார்க்கலாம் என்று முடிவுக்கு வராமல் இன்றே இப்போதே முயற்சியைத் தொடங்கி உதவிட வேண்டும். எத்தனையோ குடும்பங்களில் அண்ணா ஏற்றி வைத்த விளக்கு ஒளியிட்டுக் கொண்டிருக்கிறது. எத்தனையோ குடும்பங்கள் அவரால் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவர் தன் குடும்பத்தை மறந்து, தமிழக மக்களின் குடும்பங்களுக்காக அல்லும் பகலும் தொண்டு செய்தார். நாம் அவருடைய குடும்பத்தை மறந்ததில்லை. இனியும் மறக்க மாட்டோம் என்பதற்கு அடையாளம் தான் இந்தச் சிறிய முயற்சி.

இது உதவியல்ல
நம் கடமை
வழங்கப் போவது நிதியல்ல
நன்றிக் காணிக்கை (க.க.4,க.எண்140,பக்.122)

நமது அண்ணனுக்கு நாம் செய்வது உதவியல்ல. இது அவருக்குக் கழகக் கண்மணிகள் செய்யும் கடமை. கழக உடன்பிறப்புக் கொடுக்கும் நிதி நிதியல்ல, அவருக்குக் கொடுக்கும் நன்றிக்கடன் என்கிறார். பிறர் வாழ்வில் ஒளி ஏற்றிய அண்ணனுக்கு நாம் அளிக்கும் நன்றிக் காணிக்கை என்று கூறி, நீங்களும் பிறர் வாழ்வில் ஒளி ஏற்றும் தீபமாக, துாண்டுகோளாக இருங்கள் என்று சமுதாய சிந்தனையை ஒளிரவைக்கிறார்.

**தீமைக்கு தீமை செய்யாதே**:

இலட்சிய மனிதரை நினைவுபடுத்தி பெரியார் அண்ணா பாரதிதாசன் மற்றும் நம் கருத்துக்கு இனிய தலைவர்களின் படங்களைத் திறந்தும் செவிக்கும், சிந்தைக்கும் இனிய செந்தமிழில் பொழியும் சீர்மலி உள்ளத்தினர் திறந்திட வருகின்றனர். இந்தப் பேரியக்கம் வளர வேருக்கு நீராகத் தங்கள் குருதியைப் பாய்ச்சிக் கழகத்தின் தியாகச் செம்மல்களின் திருவுருவப்படம் திறந்து தித்திக்கும் சொல் எடுத்து முழங்குகின்ற திறமையுடைய பேராசிரியர் திறந்துவைக்க இருக்கிறார் அவர் பேசினால் பகைவரின் தாள் நோக்குகின்ற துரோகம் துாளாகிப் போகும் வாள் வீச்சு என்பதை நீ அறிவாய். நடமாடும் பல்கலைக்கழகமாம் நமது ஆருயிர் அண்ணனால் அழைக்கப்பட்ட நாவலர் மாநாட்டைத் திறந்து வைக்கிறார் வேங்கை நிகர்த்த உரு வேலின் பாய்ச்சல் கண்டு இமை கொட்டாத எஃகு நெஞ்சம் அடக்கத்தின் கருவூலம் சிந்துபாடும் அருவியெனச் அடுத்து பத்து சிந்தனைக்கு வேலை தரும் செந்தமிழ் பேருரை ஒன்றைக் கேட்டு இருக்கிறாய்.

உன் தோள் வலிமையை நம்பி, அயராது அல்லும் பகலும் உழைக்கும் உன் உறுதி குலையாத இதயத்தை நம்பி, உன் உடலில் திகழும் விழுப்புண்களின் வீரவரலாற்றுக் கதைகளைப் படித்தவாறு, ஓடியாடிக் காரியம் ஆற்றும் உன் காலடியை இதழ்ப் பூக்களால் அர்ச்சித்துக் கொண்டு இருக்கிறேன். ஆம் இந்த எளியனுக்கு முதன் முதலாக கழகத்தின் மாநிலப் பொது மாநாட்டுக்குத் தலைமையேற்கும் வாய்ப்பை அளித்து இருக்கிறாய். அண்ணா அன்றே சொன்னார். என்னையும், கருணாநிதியையும் தாக்குவதற்கும், எதிரிகள் எங்கள் குலத்தையும் குடும்பத்தையும் தரக்குறைவாகப்பேசுகிறார்கள். இதை எல்லாம் எப்படித் தாங்கிக் கொள்கிறோம் என்றால் நீ இருக்கிற தெம்பில் தான் என்கிறார் இதைச் சொல்லி முடிப்பதற்குள் அண்ணனின் கண்களும் என் கண்ணும் உடைப்பெடுத்த பேராறுகளாயின. உடன்பிறப்பே இதனை ஏன் நினைவுப்படுத்துகிறேன் என்றால், மற்ற கட்சித் தலைவர் தாங்கிக் கொள்வது போன்ற எதிர்ப்பு அல்ல. நம் கழகத்தின் மீது திருப்பப்படும் எதிர்ப்புகள் பண்பு எனும் ஒரு பொருளில்லா அரசியல்வாதிகளிடமிருந்து, நாகரிகத் தாக்குதலையோ நடந்தவைகளை நினைத்துப் பார்க்கவும் மறுக்கிற ‘நன்றி’ பயிலா நண்பர்களிடமிருந்து தரமான விமர்சனம் எதிர்பார்க்க முடியாது.

‘எதையும் தாங்கும் இதயம் வேண்டும்” (க.க.4, க.எண்147, பக்.151)

அந்த இதயத்தை எப்படி பெற முடிகிறது, பெற்றாலும் அதனை நிலை குலையாமல் காப்பாற்ற

முடிகிறது. சேற்றினை வாரி ஒருவன் மீது வீசி விட்டு மீண்டும் அவன் கையைப் பார்த்து அழுக்காகி விட்டது என்று நாம் கவலைப்பட, ஏசு, புத்தர் போல் இல்லாவிட்டாலும், சேற்றை வீசியவர் மீது வீசாமல் இருப்போம் என்கிறார். எதிரிகள் தங்கள் வாய்வலிக்க பேசுகிறார்கள். நமக்கு எத்தனை சோதனை வந்தாலும் அண்ணா காட்டிய வழியில் நடந்து, தவறு செய்யாமல், நிதானம் இழக்காமல் இருப்போம். நாம் ஆத்திரப்பட்டால் சேற்றில் சிக்கிய யானையை நரிகூட அடித்துவிடும். ஆமாம் என் உடன்பிறப்பே! சில நேரம் வேங்கைவரிப் புலியை தன் துதிக்கையால் சுழற்றி வளைத்துக் காலால் மிதித்து கசக்கிப் போடும் ஆற்றல் யானைக்கு உண்டு. ஆனால் சகதியில் கால் வைத்த யானையாய் நாம் இராமல் யானையின் ஒலியால் அச்சம் உண்டாக்கும் நிலையில் கழகம் இருந்து நற்பணி செய்ய வேண்டும். பகைவர் சேற்றை எவ்வளவு எடுத்து வீசினாலும் நாம் பதிலுக்கு வீசிடக் கழகம் சேற்றில் ஒருபோதும் இறங்காது என்று கூறி எதையும் தாங்கும் இதயத்தோடு நாம் முன் நடப்போம் எனக் கலைஞர் கூறுகிறார்.

**நீதியின் பக்கம் நில்:**

அண்ணா அவர்கள் சந்திரமோகன் நாடகக் காவியத்திலே கோழைகள் விலகட்டும் வீரர்கள் என் பின் தொடரட்டும் என்னும் உணர்ச்சி மிகு வாசகத்தை நெஞ்சில் கொண்டு பயணத்தைத் தொடருங்கள் என்கிறார். நாம் இலட்சியத்தை அடைய இன்னும் எவ்வளவு தொலைவு செல்ல வேண்டும். ஆகவே, நாம் செல்லும் படகுப்பயணம் நமது இலட்சியமல்ல. நாம் ஆற்றைக் கடக்க இந்தப் பயணத்தை மேற்கொள்ளவில்லை. இன்னும் நாம் கடக்க வேண்டிய பாதை தான் இதுவரையில் கடந்து வந்த பாதைகளைவிடக் கடினமானது. அதனைக் கண்டு பயந்தவன் வீரனாக இருக்க மாட்டான். எந்த இலட்சியத்தை அடைய புறப்பட்ட இடத்தில்இருந்தவர்கள் அத்தனைபேரும் இறுதிவரை வருவார்கள் என்பது நிச்சயம் கிடையாது. இயேசுவின் சீடர்களின் எண்ணிக்கை குறையவில்லை. அவர் கையை முத்தமிடுவது போல் நடித்து இயேசுவை ஒரு சீடன் காட்டிக் கொடுத்தான். இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது சிரித்து மகிழ்ந்த சிலரும் இருக்கத் தான் செய்தார்கள். இயேசுவுக்கு அப்படிப்பட்ட நிலை என்றால் நமக்கு எந்த நிலையோ தெரியவில்லை.

" அன்னமிட்ட கையை அறுத்தெறிகிறவர்கள்
மாலை போட்ட கரத்தை ஓடித்தெரிகிறவர்கள்
தூக்கிச் சுமந்த தோளை சம்மட்டியால் நொறுக்குகிறவர்கள்
வாழ்வளித்தவர்களை வசைபாடுகிறவர்கள்" (க.க.5,க.எண்157,பக்.27)

இந்த வரிகளில் சொல்லப்பட்டவை நடந்தால், இந்த உலகத்தில் நீதி என்ற ஒன்று இருந்தால், அதன் மூலம் நியாயம் கிடைக்கட்டும். ஆகவே, உடன்பிறப்பே நீ என்னுடன் பயணத்தைத் தொடர்ந்து வந்து கொண்டே இரு. கோழைகள் எல்லாம் நம்மை விட்டு விலகி சென்றிடட்டும். வீரர்கள் மட்டும் என் பின்னே தொடர;ந்து வாருங்கள். நாம் நீதியின் வழியில் நடப்போம். நீதி தான் என்றைக்கும் வெல்லும் என்று கூறி உடன்பிறப்பை அழைக்கிறார; முத்தமிழறிஞர்.

**அமைதி சிறந்த ஆயுதம்:**

அறிஞர்அண்ணா அவர்கள் மேய்ப்பன் என்றும், கழகத் தோழர்கள் ஆடுகள் என்றும், இதில் அறிஞர் அண்ணா ஏய்ப்பவன் என்று கடுமையாக பலர் விவரித்தனர். ஆனால் அண்ணா, என்னுடைய வேலை பிறருக்கு விளக்கம் அளிப்பது கடமை ஆகும். பிறர்விருப்பு இல்லாது அடக்க முடியாத வெறுப்பு கொண்டவர்களை மாற்றுவது இயலாத ஒன்று. என்னுடைய பணி என் மீது பற்றும் பாசமும் கொண்ட நண்பர்கள் அனைவருக்கும் கருத்தை விளக்குவது என் கடமை என்கிறார். வெறுப்பில் உள்ளவர் சொல்லும் வார்த்தைக்குப் பதில் அளிக்க முடியாது. என் கழகத்தின் நாடி நரம்புகளான உயிர்த்

தொண்டர்கள், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உணர்வுடன் நல்ல பக்குவத்தைப் பெற்று இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்திலிருந்து சில நண்பர்கள் 1972 ஆம் ஆண்டு மத்திய அரசிடம் புகார் கருத்துகளைக் கூற அவர்கள் விசாரணைக் கமிஷன் அமைத்த நிலையில் அதற்கான விடையை அங்கு தான் கூறவேண்டும். இங்கு அதனைக் கூறியது முறையல்ல என்கிறார் அதற்கான விளக்கம் மத்திய அரசிடம் தான் கூற வேண்டும் என்று கூறியுள்ளார்.

“கவலை கொள்ளாமல் அமைதியாக இரு!

அமைதிக்கு என்றுமே அழிவில்லை.!”

ஆகவே, எதையும் பற்றி கவலை கொள்ளாமல் அமைதியாக இருந்து பணி செய். அமைதிக்கு இவ்வுலகில் அழிவே இல்லை கடிதம் மூலம் அனைவருக்கும் உணர்த்துகிறார் கலைஞர்.

**நாட்டுக்காக உயிர்தியாகம் செய்யும் வீரனாயிரு:**

ஒரு கூடாரத்தில் தளபதி உறக்கம் வராமல் உலாவிக் கொண்டு இருந்தான். மறுநாள் நடக்க வேண்டிய காரியங்கள் குறித்த திட்டங்கள் அவன் மூளையில் உலைகளத்தில் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இரவு உணவு படைக்கப்பட்ட வட்டில்கள் கூட அவனுக்கு நினைவு வரவில்லை அவன் உணர்வு அற்றவன் போல, அவனது சிந்தனை ஓடியது. அடுத்த கூடாரத்தில் ஒரு வீரன் கூறுகிறான் விழுப்புண்பட்ட நாள் நல்ல நாள் என்று கருதுகிறான். ஆமாம் இன்றைய பொழுது நாம் உயிருடன் இருக்கிறோம் நாளை யார் இருப்போம் என்று தெரியாது. அந்தக் களச்சாவில் பரிசு கிடைக்க வேண்டுமென்றால் ‘என் உடல் மீது என் தலைவரின் கண்ணீர் பட வேண்டும் என்று யாசிக்கிறேன் என்று கூறிய வார்த்தைகள் கேட்கிறது. இருவரும் தழுவிக் கொள்கிறார்கள். உலகில் எத்தனையோ மனிதர்களின் கல்லறை விலை உயர்ந்தவையாய் அழகு செய்யப்படுகின்றன. பெரிய மனிதர்கள் இறந்து இருக்கிறார்கள். ஆனால், உம் கல்லறையில் நாட்டுக்காக, மக்களை நேசித்தவர்கள் என்று எழுதப்படுவது உறுதி என்றனர். அதற்குச் சற்று தொலைவில் ஒளியைத் தவிர உள்ளே எந்த விதமான சிறு வெளிச்சமும் கிடையாது. ஒருவன் தூங்குவது போல பாசாங்கு. அனைவரும் தூங்கிவிட்டதாக எண்ணி உயிர் பிழைத்துச் செல்ல முற்படுகிறான். அவன் வெளியே போனபோது ஒருவன் உள்ளே இருந்து அவனை இழுக்கிறான். வெளியே செல்ல துணிவு கொண்டவனைப் பார்த்து கேட்கிறான் நீ ஓடினால் உன்னை ஊரார் கோழை என்பார்களே என்கிறான். நம் உயிருக்கு அவர்கள் பொறுப்பாளிகளா? இல்லை. நாம் கோழையாகவும் இல்லாமல், உயிர் பிழைத்தும் வாழ வேண்டும் என்றும் கூறுகிறான். நாம் பாசறையில் இருந்து களம் செல்லாமல் இருக்க வேண்டும். நாம் அணிவகுப்பில் நிற்கும்போதே தளபதியின் திட்டம் சரியில்லை என்று சொல்லமுடியாது. நாம் சொன்னால் கட்டுப்பாட்டை மீறிய செயலாகும். நாம் தப்பிக்க வேண்டும், கோழை என்று கூறி விடக் கூடாது என்றான். நாம் கட்டுப்பாட்டை மீறாமல் இருந்து செயல்பட வேண்டும் என்று கூறி நிலையில் நாம் இப்போது அயர்ந்து இன்றிரவு தூங்குவோம் என்று கூறிய சில நொடியில் அந்தக் கூடாரத்தில் எழுந்த குறட்டைச் சத்தம். இயற்கையின் அமைதியான உறக்கத்தைக் கூட நிலை குலைத்தது என்று கூறலாம்.

“விழுப்புண்படாத நாள்

வாழ்நாளில் வீணான நாளே!” (க.க.5,க.எண்187,பக்.138)

இவ்வாறு வீரன் கூறும் வார;த்தைகள் வீரனின் மனஉறுதியை வெளிப்படுத்துகிறது. நாட்டுக்காக உழைத்தவர் என்றும் நேசித்தவர் என்றும் கூறுவர் அதிலே விழுப்புண்பட்ட வீரனின் நாட்டுப்பற்றை எடுத்துக் கூறும் வரிகள் நாமும் நாட்டை நேசித்து வாழ்ந்து, நாட்டுக்காக உயிர்தியாகம் செய்ய வேண்டும்.

என்பதை விளக்கி கூறுகிறார்.

**அனைவரையும் சமமாக எண்ணுங்கள்:**

தமிழ்நாட்டில் மூன்று பெரிய கும்பாபிஷேகங்கள் நடைபெற்றிருக்கின்றன. இதில் திருவண்ணாமலை ஆலயத் திருப்பணி, மதுரை கூடலழகர் கோவில் திருப்பணி, காஞ்சிபுரத்து காமாட்சி அம்மன் ஆலய கும்பாபிஷேகமும் கோலாகலமாக நிறைவேறியது. இதில் செய்த செலவு அதிகம். தங்கவிமானம் ஒரு கோடி செலவில் அவசியமா? என்று கேட்கலாம். நமக்கு என்று சில கொள்கைகள் உண்டு. அந்தக் கொள்கைகள் எவர் மனதையும் புண்படுத்தக் கூடாது. சிலர் சில காரியங்களில் நம்பிக்கையுடன் இருப்பர் அவர்களது நம்பிக்கையில் நாம் இடையூறு செய்யக் கூடாது. நாம் செய்ய வேண்டியதைப் பொறுப்பில் வந்தவுடன் செய்து கொண்டேதான் இருக்கிறோம். ஆட்சிக்கு வருவதற்கு முன்பு இவர்கள் வந்தால் கோயிலை இடித்து விடுவார்கள் என்று கூச்சல் போட்டார்கள். ஆனால், ஆண்டவன் காரியங்கள் எதுவும் நடக்கவில்லை என்கிறார்கள். ஆண்டவன் காரியங்கள் அனைத்தும் நடந்து கொண்டு தான் இருக்கிறது. ஓடாத தேர்கள் எல்லாம் திருவாரூர் திருவல்லிப்புத்தூர் போன்ற ஊர்களில் ஓடிக் கொண்டு இருக்க நாம் தான் காரணம். ஆனால், வதந்தி கூச்சல் போடுபவர்களைப் பற்றிக்கவலை கொள்ளாதே. 1970 ஆம் ஆண்டு கழக அரசு ஆணை பிறப்பித்தது நாற்பதாயிரம் ஆலயங்களை அறநிலைத்துறை கண்டுபிடித்து அவைகளுக்கு உரிய நிலத்தை மட்டும் அறுபத்தையாயிரம் ஏக்கர் நிலங்களும் அறநிலைத்துறையின் கட்டு;ப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆலயத்தை நம்பி வாழும் குடும்பங்களுக்கு, ஊதியத்தை உயர்த்தியும் அவர்கள் பணிக்காலத்தில் இறந்தால் குடும்ப நிதியாக குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அறிமுகப்படுத்தியது. அவர்களின் வாழ்த்தைப் பெற்றது. சமுதாய மேன்மை, சமூக நலன், ஊனமுற்றோர் உதவி, ஆதரவற்றோர் வாழ்வு, கண்ணொளித்திட்டம், கருணை இல்லம், போன்ற நற்காரியங்களுக்கும் ஆலயங்கள் பயன்படுத்தப்பட்டன. அவை ஆண்டவனுக்கும் விருப்பமான செயல்கள் ஆகும். “ஆண்டவன் முன்னே அனைவரும் சமம்!” (க.க.5,களண்193,பக்.174) கடவுள் முன் அனைவரும் சமம் என்பது உதட்டு அளவில் இல்லாமல் உள்ளத்தின் செயலாக இருந்து, ஆலய அறங்காவலர் குழுவில் ஒரு அரிஜனப் பிரதிநிதி கட்டாயம் இருந்திட வேண்டும் என்பது கழக அரசின் விதியாக இருந்தது. ஆனால், ஆலயங்களை, தீர்த்தக் குளங்களை இவர்கள் கெடுத்து விட்டனர். என்று பொய் பிரச்சாரம் பண்ணுகிறார்கள். இவர்களைக்கடவுள் என்று ஒருவர் இருந்தால் அவர் இவர்களைத் தண்டிக்காமல் விடுவாரா? என்று கூறி, ஆண்டவன் பார்வையில் அனைவரும் சமமானவர்கள் அது மட்டும் அல்ல பொய் பேசாமல் இருந்து ஏற்றத்தாழ்வு அற்ற நிலைஉருவாக வேண்டும் என்கிறார் கலைஞர்.

**இலட்சியப் பாதையில் நிமிர்ந்து நட:**

தனக்கு என்று இலட்சியம் கொண்டவர்கள் எவரும் அதற்கான பணியாற்றுகையில், பல குறுக்குப் பாதைகள் கண்டால் அவற்றில் நுழைய மாட்டார்கள். இலட்சியத்தை நோக்கி பயணம் செய்வோர் அதற்கான ஆக்கமும் ஊக்கமும் தலைவரிடம் பெறுகிறார்கள். எந்த நிலையிலும் இலட்சியப் பாதையை விட்டு விலகாமல் இலட்சியத்தைக் கைவிடாமல் மறைந்தும் மறையாமல் வாழக்கூடியவன் சிலர் வயிற்றுப் பிழைப்புக்காக வாழ்ந்து கொண்டு இலட்சியத்தை மறந்து விடுகிறார் வாழ்க்கை என்பது இதயத்தோடு, அறிவோடு, பொதுப்பணிவோடு ஒரு இலட்சியத்தோடு தொடர்புடையது. வாழ்க்கையில் இன்பம்-துன்பம், இகழ்ச்சி-புகழ்ச்சி, உயர்வு-தாழ்வு இவற்றை எல்லாம் சந்திக்க தான் வேண்டும். தவழும் தென்றல், சுழன்றடிக் சூறாவளி இரண்டையும் ஒன்று போலக் கருதி இலட்சியத்தை விடாது பிடித்துத் தொண்டு செய்பவன் முழுமையான வாழ்க்கைக்குக் எடுத்துக்காட்டாக விளங்குகிறான். அண்ணா சொன்னது போல குறுக்குப் பாதையின் வாழ்க்கைப் பயணம் எளிமையானவை. கடினமிராது. ஆகவே, அதை நாடி ஓடுபவர் கடைசியில் நிலை தடுமாறி நின்று இலட்சியம் அடையாமல் போனவர்கள் பலர்.

அலெக்ஸ்சாண்டரை எதிர்த்த போரஸ் மன்னர் தோல்வி தழுவிய போது, அலெக்ஸ்சாண்டர் உனக்கு என்ன வேண்டும் என்று கேட்ட போது அவன் என்னை மரியாதை உடன் நடத்த வேண்டும் என்றான். போரஸ் மன்னன் குறுக்கு வழியை நாடி இருந்தால் வரலாற்றில் இடம்பெற்று இருக்கமாட்டான். எனவே, இலட்சியப் பாதையில் பயணம் செய்யும் போது இடையூறு மரணம் வந்தாலும், காலம் அவனை மறந்துவிடாது இலட்சியப் பாதைகள் ஒரு மனிதனை வரவேற்கும் கல்லறைகள் காலத்தால் அழியாமல் நிற்கும். உடன்பிறப்பே, அந்த ஈடு இணையற்ற இலட்சியப் பாதையில் நம் பயணத்தைத் தொடருவோம்.

நடந்துகொண்டேயிருக்கிறோம்
நடந்து கொண்டேயிருப்போம்!
நமது கொள்கைக்கு அழிவில்லை!
நமது இலட்சியத்துக்கு அழிவில்லை! (க.க.8, க.எண் 296, பக்.195)

உன் அமைதி பொறுமை எதையும் தாங்கிடும் உள்ளமும் என்றைக்கும் நமக்குத் துணையாக நிற்கும். ஆகவே இலட்சியப் பாதையில் தொடர்ந்து பயணி என்று கடிதம் மூலம் கூறுகிறார்.

**நாட்டில் பொதுவுடைமையை நிலைநாட்டு**:

பொருளாதாரத் திட்டம் என்னவென்று தெரியாதவர்கள் எல்லாம் பேசுகிறார் என்று சொன்னபோது மிகவும் வருத்தம். பொருளாதாரம் தெரியாதவர் எப்படி? கம்யூனிசம், சோஷியலிசம், கேப்டலிசம் மூன்றும் இணைத்ததே ‘அண்ணாயிசம்’ என்று அரும் பதவுரை அருளிய அவருக்குப் பொருளாதாரம், பொருளாதாரக் கொள்கை தெரிவில்லை என்று கூற முடியாது. விவசாயம் செய்பவர்களுக்கு விவசாயம் செய்யும் நிலங்கள் அனைத்தும் தேசிய மயமாக்கப்படும் என்றும், எருவும் உரமும் இனமாக வழங்கப்படும் என்றும் கூறிய போது யாரும் அதைக் கேட்கவில்லை அதையெல்லாம் ஒப்புக் கொண்டனர். அவருடைய பொருளாதாரச் சீர்திருத்தக் கொள்கை என்றனர். அனைத்தும் உடைமையும் பொதுவுடைமை ஆக்கப்பட வேண்டும். பொதுவுடைமை என்ற நோக்கில் உழைப்பையும், அறிவையும் பொதுவுடைமையாக்கிட வேண்டும். எல்லாரும் உழைக்க வேண்டும் எல்லாரும் பாடுபட வேண்டும். இதில் ஒரு சிலர் தான், என்பது மாற வேண்டும் அனைவருக்கும் பயன் என்ற சூழல் உருவாகிட வேண்டும். நாம் பிறர்கூறிய வார்த்தைகளை எண்ணி, நம் புரட்சிப் பயணத்தை நிறுத்தக் கூடாது. கடித்த பாம்பு விஷத்தைத் திரும்ப எடுக்க வேண்டும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதுபோல சிலரைத் தலைவராக்கியவர்கள் மக்கள் தான். மக்கள் தான் தலைவரைத் திருத்த வேண்டும் இங்குப் பொது மக்களை பச்சைப் பாம்பு என்று உவமையாக கூறப்பட்டுள்ளது. பச்சைப் பாம்பு சாதாரணம் இது பச்சைக் குத்திக் கொண்ட பாம்பைப் பற்றி கூறினார் கலைஞர். பரமசிவன் கழுத்தில் உள்ள பாம்புடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளேன். இதன் பொருள் கலைஞருக்கும் புரியாது, மற்றவருக்கும் புரியும் என்று பொருள் கூறுவார். இவ்வளவு விளக்கம் கூறியும் அவர்களுக்குப் புரிய வில்லை என்றால் நாம் பொறுத்துக் கொண்டு தான் ஆக வேண்டும். இன்று சிலர் கட்டுப்பட்டும், குட்டுப்பட்டும் உள்ளனர். இந்தியாவில் இருக்கிற அனைவருமே திராவிடர்கள் தான் என்று கூறிய விளக்கத்தை அனைவரும் ஏற்றனர் அதனை யாரும் மறுக்கவில்லை.

பொருளாதாரத்தில் புரட்சி
வரலாற்று ஏட்டில் புரட்சி
உவமையில் புரட்சி
உதாரணத்தில் புரட்சி
பயணத்தில் புரட்சி (க.க.9,களண்303,பக்.24)

பொருளாதாரம், வரலாற்று ஏடு, உவமை, உதாரணம், பயணம் இவற்றில் புரட்சி ஏற்படும் போது அதை எல்லாம் நாடு தாங்கித் தான் தீர வேண்டும். நம் நாட்டில் பொதுவுடைமை என்ற நோக்கில் எல்லாரும்

பாடுபட்டு உழைத்து எல்லாரும் நன்மை அடையவேண்டும் என்ற பொதுவுடமை கொள்கையை நிலைநாட்ட வேண்டும் என்கிறார்.

**தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்வுக்குப் போராடு:**

அண்ணன் தம்பி இருவரும் அன்பில் இணைந்தவர்கள் பள்ளி ஒன்றில் படித்துக் கொண்டு இருந்தனர். இருவரும் தந்தையை காண ஆவலுடன் இருந்தனர். கடிதத்தைத் தந்தைக்கு அனுப்பினர். ஆனால் அனுப்பிய கடிதம் கிடைக்கவில்லை. இளைஞர் இருவரையும் அழைத்துச் செல்ல தந்தை புகைவண்டி நிலையம் வரவில்லை. இருவரும் ஏமாற்றம் அடைந்த நிலையில் ஒரு மாட்டுவண்டியில் வர தீர்மானித்து வாடகை மாட்டு வண்டியைப் பிடித்து தந்தையைப் பார்க்க வந்தனர் மாட்டு வண்டிக்காரன் வழியில் இருவரின் விவரம் கேட்டான். அவர்கள் இருவரும் தாழ்த்தப்பட்ட சமூகம் சார்ந்தவர் என்பதை அறிந்த உடன் வண்டிக்காரன் புலியாக மாற இளைஞர; இருவரும் மான்குட்டியாக காட்சி தந்தனர் வண்டிக்காரன் வாயில் இருந்து எரிமலைக் குழம்பு வருவதுபோல சொற்கள் வந்தன. நெருப்பில் விழுந்த மலர்களாக இருவரின் முகம் அகம் மாறியது. பாவி பயல்களே உங்களை ஏற்றியதால் என் வண்டியின் தூய்மை கெட்டுவிட்டதே. 'வாயிலும், வயிற்றிலும் அடித்தான். சாதி வெறிப்பிடித்த வண்டிக்காரனிடமிருந்து தப்ப எண்ணிய இருவரும் வண்டிக்கு அதிக வாடகை தருவதாகக் கூறியதோடு, அண்ணன் வண்டியை ஓட்ட வேண்டும் தம்பி உட்கார்ந்து வர வேண்டும் வண்டிக்காரன் நடந்து வர நிபந்தனை ஏற்றுக்கொண்டான் வண்டிக்காரன். ஆனால் வரும் வழியில் தாகம் எடுக்க தண்ணீர் யாரும் தரவில்லை. இந்தத் தாகத்துடன் தந்தையின் வீடு அடைந்தது. நடந்த அவமானத்தைக் கூற தந்தை அழுதார் அவர்தான் இராம்ஜி இவருக்குப் பிறந்த பதினான்காவது குழந்தை பீமாராவ் ராம்ஜி தாழ்த்தப்பட்ட சாதி என்பதால் அவமானம் ஏற்பட்டது. சாதிக் கொடுமை தலைவிரித்தாடிய இந்திய நாட்டில் பார்ப்பன. குலத்தில் பிறந்த அம்பேத்கர் என்ற ஆசிரியரின் அன்பு இவருக்குக் கிடைக்க கல்வி கற்றார். எத்தனையோ எதிர்ப்பு வந்த நிலையிலும் தன் அன்புக்குரிய ஆசிரியர் பெயரைத் தனது பெயராக மாற்றினார; அம்பேத்கர் என்று மாற்றி நன்றி கடன் செலுத்தினார் சாதி என்பது ஒரு அமைப்பு. அதை எதிர;த்து போராடியவர;. மதத்தினால், கடவுளால், மக்களைக் கொடுமை படுத்தக்கூடாது என்றார்.

மதத்தின் பெயரால்
கடவுளின் பெயரால்
கட்டுக்கதைகளின் பெயரால்
மக்களை மக்களாக்கிடும்
கொடுமைகளை எதிர்த்து
போர்வாள் தூக்கினார் (க.க.9,க.எண்335,பக்.164)

சீர்திருத்தச் சிற்பியாக, சாதியக் கொடுமையைத் தகர்த்து இந்திய திருநாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கி தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்காக பாடுபட்டார் நாமும் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக உழைக்க வேண்டும் என்று கூறுகிறார்.

**பகுத்தறிவு பாதையில் சமுதாயத்தை நடத்திடு:**

நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, மொழி, கலாச்சாரம் குறித்து பெருமைப்பட எவருக்குமுள்ள உரிமை, வேற்றுமையில் ஒற்றுமை, சகிப்புத்தன்மை, இணக்கம், பிற்போக்குச் சக்திகளையும், புறக்கண்டு பகுத்தறிவையும், விஞ்ஞான அறிவையும் வளர்ப்பது அவசியம். நம் நாட்டில் மாணவர்கள் தான் எதிர்காலத் தலைவர்கள் அவர்களுக்கு ஆர்வத்தையும் திருக்குறள் கருத்துகளின் அடிப்படையில் வாழ நெறிப்படுத்த வேண்டும். மொழிகளில் மட்டுமின்றி மதம், இனம், வட்டாரம் போன்ற நமது வேறுபாடுகளை களைந்து, பிரிவினைச் சக்தியை அகற்றி ஒற்றுமைக்குப் பாடுபட வேண்டும். பிரிவினை வாதம் இருந்தால் அது நம்மைப் பலவீனப்படுத்திவிடும். நம் நாட்டின் தமிழ் இலக்கியச் செல்வம் அனைத்தும் நம் நாட்டுப் பாரம்பரியத்தை வெளிப்படுத்துகிறது. மொழி, கலாச்சாரம் பெருமைப்பட

அவருக்கும் உரிமை உண்டு. ஆனால், அந்தப் பற்று வட்டாரக் காழ்ப்புணர்ச்சியாக மாறிவிடக் கூடாது. வள்ளுவர் கம்பர் போன்ற தமிழ்ப் புலவர்கள் இந்தியா முழுவதுக்கும் சொந்தமானவர்கள். அண்ணா பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு உள்துறை மத்திய அமைச்சர் பிரமானந்தரெட்டி அவர்கள் கூறியவை இனிக்கும் கருத்தாகும். தமிழ்நாட்டில் மட்டுமின்றி இந்தியா முழுமையும் போற்றிப் பாராட்டி மகிழ வேண்டும்.

“பிற்போக்கு சக்திகளை முறியடிக்க ஒரே வழி
மக்களிடம் பகுத்தறிவையும் விஞ்ஞான
உணர்வையும் வளர்ப்பதே”. (க.க.9,க.எண்336,பக்.167)

இது அவருடைய பேருரையின் சிறப்பு ஆகும் பகுத்தறிவு இயக்கத்தின் பின்னணியில் வளர்ந்த நமக்கு விஞ்ஞான உலகின் விரைவான வளர்ச்சியில் மூட நம்பிக்கைகளின் காரணமாக பின் தங்கிய சமுதாயத்தை மாற்றி அமைத்திட வேண்டும் என்கிறார்.

**ஆதிக்கமற்ற சமுதாயம் உருவாக்கு:**

அறிஞர் அண்ணா வகுத்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அடிப்படையில் அரசியல் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து ஆதிக்கமற்ற சமுதாயத்தை உருவாக்கவும் பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சிக்கான சீர்திருத்தப்பணி ஆற்றிடவும், பொருளாதாரத் துறையில் வறுமையை வென்று சமதர்மம் அடிப்படையில் நல்வாழ்வு பெற, பிறமொழி ஆதிக்கம் பெறாமல் தடுத்து, நம் மொழியை வளர்த்திடவும் மாநிலத்துக்குத் தேவையான சுயாட்சி வேண்டும் என்றும், மத்தியில் கூட்டாட்சி அமையத் தொண்டாற்றிட வேண்டும். நம் இயக்கத்தில் பிரிவினை எண்ணம் உடையவருக்குக்கழகத்தில் இடமில்லை. நாம் மிகவும் கண்டிப்புடன் எதிர்காலத்தில் இருக்க வேண்டும். நமது வேட்பாளரின் வெற்றி மிக முக்கியம். நம்மை எதிர்த்துப் போட்டியிடுவோரின் மனத்தைப் புண்படுத்துவது நமது குறிக்கோளாக இருக்கக் கூடாது. கழக வேட்பாளர்கள் சொல்வது நமது பணியும் பதிலும் நமது கொள்கை விளக்குவதாக அமைந்து, எள் முனை அளவும் அமைதி குலைவதற்கு இடம் தரும் வகையில் இருந்திடக் கூடாது. யாரையும் வீழ்த்துவது அழிப்பது நமது நோக்கமல்ல. நம்மை நாட்டுக்கு உணர்த்துவதே நமது நோக்கமாக இருக்க வேண்டும்.

இழிவுபடுத்திக் கூறுவது
அவதூறு பேசுவது
ஆகியவற்றை விட்டொழிக்குமாறு,
அரசியல் கட்சியை வேண்டினார் - இந்திராகாந்தி (பிரதமர்)

(க.க.10,க.எண்358,பக்.80)

கலைஞர் எப்போதும் தம் கழகத்திலும், கழகத்தின் கொள்கையிலும் இந்தக் கருத்து எப்போதும் பின்பற்றப்பட்டுவருகிறது. ஆகவே, எல்லா நிலையிலும் நாட்டுக்கு நன்மை செய்து ஆதிக்கமற்ற சிறந்த சமுதாயம் காண வேண்டும் என்றுரைக்கிறார் கலைஞர்.

**சமுதாய வளர்ச்சிக்குத் தோள்கொடு:**

மனிதன் யாருக்குப் பதில் சொல்லாவிட்டாலும், தன் மனசாட்சிக்குப் பதில் சொல்லியே தீரவேண்டும். வாழும் போது நன்றாக வாழ்த்தியவர்கள் இன்று தாழ்ந்த காரணத்தால் நம்மைத் தாக்கி வாழ்கிறார்கள். எப்படியோ ஒரு சிலர் நம்மாலே வாழ்வைச் செப்பனிட்டுக் கொண்டார்கள். உடன்பிறப்பே! அவர்களுக்கும் நமக்கும் இருந்த உறவை எப்படி மறக்கமுடியும் அவர்கள் ஒரு வார்த்தையில் சொல்லி விட்டார்கள். நாம் மறக்கமுடியாமல் தவிக்கிறோம். கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் கடைசியாக விழிகளை மூடி நீடுதுயில் கொள்வதற்கு முன்பு, இந்தச் சாமாணியரின் கரங்களைப் பிடித்துக் கொண்டு நான், நீங்கள் செய்த நன்மையை மறக்கமாட்டேன். நாங்கள் நம்பிக்கை

உடையவராக நன்றியுணர்வு கொண்டவராக இருப்போம் என்று தழுதழுத்த குரலில் சொன்னார். உடன்பிறப்பே முஸ்லீம் லீக் அமைப்பின் மீது ஏற்பட்ட கீறல் இது. மண்பாண்டத்தில் விழுந்த கீறல் அல்ல. இது தங்கத்தட்டில் விழுந்த கீறல், என்றோ ஒரு நாள் அதனை உருக்கி ஒன்றாக்கி விடலாம் என்று கூறினார். கலைஞர் அவர்கள் தாருல் இஸ்லாம் என்ற பத்திரிகையைச் சிறுவனாக இருந்தபோது படித்து மகிழ்ந்தவர் திருவாரூர் மாநாட்டில் கான்பகதூர் கலிபுல்லா கலந்து கொண்ட போது இவரும் கொடி தூக்கி ஊர்வலம் சென்றார் தமிழ் பேசும் முஸ்லீம், உருது பேசும் முஸ்லீம் அனைவரும் பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்பதை ஆளும் பொறுப்பு வந்தவுடன் செய்யலாம் என்று நினைத்ததை நிறைவேற்ற முடிந்தது. முஸ்லீம் உடன் தோளோடு தோள் கொடுத்தது நம் அமைப்பு சமுதாயம் வளர்பிறையாய் நன்மை பெற வேண்டும் என்று உரைக்கிறார்.

" அந்தச் சமுதாயத்துடன் நாம்
கொண்ட தோழமை தேய்பிறை அல்ல
வளர்பிறை! வளர்பிறை! (க.க.10, க.எண்361,பக். 96)

**ஆய்வுத் தரவுகளின் தொகுப்பு மற்றும் அட்டவணைப்படுத்தல் (Data Aggregation and Tabulation)**

கலைஞர் கருணாநிதியின் கடிதங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட பல்வேறு சமூகச் சிந்தனைகளின் மையக் கருத்துகளையும், அவற்றின் மூல ஆதாரங்களையும் ஆய்வுத் தரவுகளின் நம்பகத்தன்மைக்காகப் பின்வரும் அட்டவணை தொகுத்து வழங்குகிறது.

அட்டவணை 1: கலைஞரின் சமூகச் சிந்தனைகளும் அதற்கான மூலக் கடிதச் சான்றுகளும்

| **சமுதாயச் சிந்தனை** | **விளக்கத்தின் மையக்கருத்து** | **கடித எண். & பக்க எண்.** | **முக்கிய மேற்கோள்** | **சான்று** |
|---|---|---|---|---|
| ஒற்றுமையை நிலைநாட்டு | பிரிந்து சென்றவர்கள் இணைந்து பணியாற்ற வலியுறுத்துதல். | க.க.1.க. எண்.1 பக்.4. | "மாலையில் இருந்த மலர்கள் திடிரென உதிரிப்பூக்களாவதா?" | 1 |
| ஓய்வின்றி பணி செய் | பதவிகளைக் கடந்தும் கழகப் பணி தொடர வேண்டியதன் அவசியம். | க.க.2.க. எண்.38.பக்.33. | "இன்று உன் வேலை முடிந்து விட்டதாக எண்ணிடாதே!..." | 1 |
| வன்முறைப்பக்கம் தலை வைக்காதே | வன்முறையை நிராகரித்து, அறவழியில் பணியாற்ற வலியுறுத்துதல். | க.க.2.க. எண்42.பக்.53,54 | "வன்முறையைக் கண்டிப்பது பொதுவான விவகாரமாகும்!..." | 1 |
| தமிழ் எனும் பயிரை வளர செய் | துரோகம், சந்தர்ப்பவாதம் அண்டாமல் திராவிட இயக்கத்தை வளர்த்தல். | க.க.3, க.எண்97, பக்.107 | "துள்ளி வரும் வேலே! ஆவேசத்தை அள்ளி வரும் வாளே!..." | 1 |

| சமுதாயச் சிந்தனை | விளக்கத்தின் மையக்கருத்து | கடித எண். & பக்க எண். | முக்கிய மேற்கோள் | சான்று |
|---|---|---|---|---|
| பொதுப்பணியாற்ற புறப்படு | கைமாறு கருதாமல் எதிர்காலத்திற்குப் பயன்படும் பொதுப்பணி செய்தல். | க.க.4,க.எண்113,பக்.9 | "கண்ணீர் துடைக்க உன் கைகள் தாவட்டும்!..." | 1 |
| பிறர் வாழ்வில் ஒளி ஏற்று விளக்காயிரு | அண்ணாவின் குடும்ப நிதிக்கு அளிப்பது நன்றிக் காணிக்கை, உதவி அல்ல. | க.க.4,க.எண்140,பக்.122 | "இது உதவியல்ல நம் கடமை வழங்கப் போவது நிதியல்ல நன்றிக் காணிக்கை" | 1 |
| தீமைக்கு தீமை செய்யாதே | எதிரிகள் சேற்றை வீசினாலும், நாம் பதிலுக்குச் செய்யாமல் பொறுமை காத்தல். | க.க.4, க.எண்147, பக்.151 | "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" | 1 |
| அனைவரையும் சமமாக எண்ணுங்கள் | ஆலய நிர்வாகத்தில் சமத்துவத்தை நடைமுறைப்படுத்துதல். | க.க.5,கஎண்193,பக்.174 | "ஆண்டவன் முன்னே அனைவரும் சமம்!" | 1 |
| நாட்டுக்காக உயிர்தியாகம் செய் | நாட்டுப்பற்றுடன் தியாகம் செய்ய வேண்டியதன் அவசியம். | க.க.5,க.எண்187,பக்.138 | "விழுப்புண்படாத நாள் வாழ்நாளில் வீணான நாளே!" | 1 |
| இலட்சியப் பாதையில் நிமிர்ந்து நட | குறுக்குப் பாதைகளைத் தவிர்த்து, இலட்சியத்தை நோக்கித் தொடர்ந்து பயணித்தல். | க.க.8, க.எண் 296, பக்.195 | "நடந்துகொண்டேயிருக்கிறோம் நடந்து கொண்டேயிருப்போம்!" | 1 |

## முடிவுரை (Conclusion)

### கலைஞரின் சமுதாயச் சிந்தனைகளின் நீடித்த தாக்கம்

கலைஞர் கருணாநிதியின் கடிதங்கள் வெறும் அரசியல் உரைகளாக அல்லாமல், மானிட சமூகம் நலம் பெற ஒளி வீசும் சமுதாயச் சிந்தனைகளின் தொகுப்பாய் அமைந்திருந்தன. இந்தச் சிந்தனைகள், தொண்டர்களின் மனதில் ஒளியாய் ஊடுருவி, அகத்தில் நல்லெண்ண அலைகளை ஓடவைத்து, சமூகநீதி காத்து ஆதிக்கமற்ற நல்ல சமுதாயம் உருவாக்க வழிகாட்டின.

கலைஞர் வலியுறுத்திய பகுத்தறிவுப் பாதை, ஆதிக்கமற்ற சமுதாயம், அறவழி அரசியல், மற்றும் சமூக நீதிப் பாதுகாப்பு ஆகியவை கால ஓட்டத்தில் கரையாது நிற்கும் நிரந்தரத் தத்துவக் கோட்பாடுகளாகும். அவர், அரசியல் தலைமையும் சமூகப் பொறுப்பும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்ற ஆழமான கருத்தை நிலைநிறுத்தி, தொண்டர்கள் தங்கள் அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளையும், அரசியல் இலட்சியங்களையும் ஒருங்கிணைத்தார்.

"கடித வரிகள் காலத்தால் அழியாது! கற்றவர் மனதில் நற்சிந்தனை வளர்க்கும்! கலைஞரின் சமூக சிந்தனை என்றும்! கால ஓட்டத்தில் கரையாது நிற்கும்!" என்று நிறைவு செய்யப்படும் இந்தச் சிந்தனைகள், தன்னலமற்ற ஓர் அரசியல் தலைவரின் தார்மீக அடித்தளத்தை வலுப்படுத்தியதன் சான்றாக விளங்குகின்றன. சமூக வளர்ச்சிக்குத் தோள் கொடுத்தல், பிறர் வாழ்வில் ஒளி ஏற்ற விளக்காய் இருத்தல் போன்ற சிந்தனைகள் மூலம், அவர் சமுதாயத்திற்கான தனது பங்களிப்பை நிரந்தரமாக்கினார்.

காலைக் கதிரவனின் ஒளிக்கதிராகச்சமுதாயச் சிந்தனை ஒளிகள் மானிட சமூகம் நலம் பெற ஒளி வீசும் கருத்தாகும். மக்கள் மனதில் ஒளியாய் ஊடுருவி, அகத்தில் நல்ல எண்ண அலைகளை ஓடவைத்து, சமூகம் நன்மை அடைய, ஒற்றுமையுடன் சமூகநீதி காத்து ஆதிக்கமற்ற நல்ல சமுதாயம் உருவாக்க யாருக்கும் தீமை செய்யாது தமிழன் என்ற உணர்வுடன் தமிழ்ச் சமூகம் பாதுகாக்கவும் உலக மக்களுக்கும் நல்லறிவு புகட்டும் கருத்தாய் ஒவ்வொரு நாளும் வெளிவந்தது. இப்படிப்பட்ட நல்லறிவுரையைத் தன்னலமற்ற மாமனிதரால் தான் கூற முடியும்.

“கடித வரிகள் காலத்தால் அழியாது!
கற்றவர் மனதில் நற்சிந்தனை வளர்க்கும்!
கலைஞரின் சமூக சிந்தனை என்றும்!
கால ஓட்டத்தில் கரையாது நிற்கும்!

**ஆய்வுக் கருத்து மற்றும் எதிர்கால நோக்கு**

கலைஞரின் கடித இலக்கியம், ஒரு வெகுஜனத் தலைவரின் சித்தாந்தப் பரவலுக்கான ஒரு தனிப்பட்ட மாதிரியை முன்வைக்கிறது. கடிதங்களில் காணப்படும் நீடித்த இலட்சிய உறுதிப்பாடு, அரசியல் சகிப்புத்தன்மையுடன் கூடிய உறுதியான செயல்பாடு மற்றும் வன்முறையை நிராகரித்தல் ஆகிய அணுகுமுறைகள், திராவிட இயக்கம் பல்வேறு சோதனைகளின் போதும் பிளவுபடாமல் சித்தாந்தரீதியில் நிலைத்திருப்பதற்கான முக்கியக் காரணிகளாக அமைந்தன. அவரது சிந்தனைகள், அரசியல் தலைமை என்பது வெறுமனே அதிகாரம் செலுத்துவது மட்டுமல்ல, அது சமூகச் சீர்திருத்தத்தை இலக்காகக் கொண்ட ஒரு தார்மீகக் கடமையாகும் என்பதை நிறுவுகின்றன. கலைஞரின் சமூகச் சிந்தனைகள், எதிர்கால ஆய்வாளர்களுக்குத் திராவிட இயக்கம், வெகுஜன ஊடகம் மற்றும் சமூக நீதி ஆகியவற்றின் இடையேயான உறவைப் புரிந்துகொள்ளும் ஆழமான தளத்தை வழங்குகின்றன.

**வாழ்க கலைஞர்! வளர்க தமிழ்!!**

**உசாத்துணைப் பட்டியல்**

கலைஞர் கடிதங்களில் சமுதாயச் சிந்தனை.” *Ref1.doc*. N.d., pp. 4–195.. [1] (குறிப்பு: மூல ஆவணத்தின் பக்க எண்கள் கட்டுரையின் உள்ளே சுட்டப்பட்டுள்ளன).

**உரிமம்**

cc BY
இந்த ஆக்கம், கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளது.

Tamilmanam